1992 ஏப்ரல் 23]

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட தகவல் அரசின் கவனத்திற்கு வரவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினா எண் 591, திரு. கே. செல்வராஜ், திரு. கே. ஆர். முருகானந்தம்; மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர்.

591—

**புகார் மனுக்கள் மீது நடவடிக்கை எடுக்க மாவட்ட ஆட்சித் தலைவருக்குத் துணையாக ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் நியமித்தல்.**

*5014 **திரு. கே. செல்வராஜ் :**

**திரு. கே. ஆர். முருகானந்தம் :**

மாண்புமிகு வருவாய் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மாவட்ட ஆட்சித் தலைவரிடம் கொடுக்கப் படும் புகார் மனுக்களை வேலைப்பளு காரணமாக அவர் உடனடியாக பரிசீலனை செய்ய முடியாததால் உடனடியாக துரிதமாக மனுக்கள் மீது பரிசீலனை செய்ய மாவட்ட ஆட்சித் தலைவருக்குத் துணையாக செயல்பட ஐ.ஏ.எஸ். அதிகாரிகளை நியமிக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது நியமிக்கப்படுவர் ?

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாவட்ட ஆட்சித்தலைவருக்குத் துணையாக மனுக்களைப் பார்ப்பதற்காக ஐ. ஏ. எஸ். அதிகாரி ஒருவரைப் போடுகிற நோக்கம் அரசுக்கு இப்போது இல்லை.

**திரு. கே. செல்வராஜ் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே மாவட்டத்தில் உள்ள எல்லா துறைகளின் நிர்வாகத்தின் பொறுப்பும் மாவட்ட ஆட்சியருக்கு உள்ளது. அவர்கள் பொது மக்களிடமிருந்து வரும் கோரிக்கை மனுக்களை உடனுக்குடன் பரிசிலனை செய்யவும், சட்டமன்ற உறுப்பினர்களாகிய நாங்கள் கொடுக்கின்ற மனுக்களானாலும் சில நேரங்களில் 2, 3 மாதங்கள் ஆகியும் முறையாகப் பதில் வருவதில்லை என்பதாலும், நாங்கள் உடனுக்குடன் அவைகளுக்கு நடவடிக்கை எடுக்கமுடிவதில்லை என்பதாலும், இந்தப் பிரச்சினைகளைக்

களைவதற்கும் அவர்களுடைய வேலைப்பளு அதிகமாக இருக்கும் காரணத்தால், அவர்களோடு சேர்ந்து பணியாற்றுவதற்கு, உடனுக்குடன் கோரிக்கை மனுக்களை நிறைவேற்றிக் கொடுக்க, அரசின் திட்டங்கள் மக்களுக்கு உடனுக்குடன் போய்ச் சேர உதவியாகப் பணியாற்றுவதற்கு. ஐ.ஏ.எஸ். அதிகாரிகளை நியமிக்க இந்த ஆண்டு அல்லது அடுத்த ஆண்டாவது அரசு ஆலோசிக்குமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் திங்கள்தோறும் பொதுமக்களைப் பார்த்து வருகிறார்கள். அப்படிப் பார்த்துவருகிறபோது மனுக்கள் ஆயிரக்கணக்கில் வந்து குவிகின்றன. அதையெல் லாம் ஆராய்ந்து பார்க்கத்தான் இந்த ஆண்டிலிருந்து மாவட்ட ஆட்சித் தலைவர்களிடத்தில்—இப்போதே பி.ஏ. (ஜெனரல்) ஒருவர் ஆர். டி. ஓ. லெவலில் இருக்கிறார்— இருந்தாலும் அது போதாது, மக்களிடத்திலே இருந்து வருகிற மனுக்களை மட்டுமே பார்த்து முடிவெடுப்பதற்காக இன்றைக்கு புதிதாக எல்லா மாவட்டங்களிலும் மாவட்டத் திற்கு ஒரு ஆர். டி. ஓ-வை மாவட்டத்தின் தலைநகர்களில் மாவட்ட ஆட்சித் தலைவருக்குத் துணையாக நியமிக்கிற கருத்து அரசின் ஆய்வில் உள்ளது. நியமிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. ஆர். முருகானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே இந்தக் குறை தீர்க்கும் நாளிலே கொடுக்கப்படுகிற புகார்கள் குறித்து குறிப்பிட்ட காலக் கெடுவிற்குள் முடிவு அறிவிக்கப்படும் என்று வெள்ளை அட்டையில் எழுதிக் கொடுக்கிறார்கள். ஆனால் அந்தக் குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் அந்த முடிவுகள் மனுதாரர் களுக்குத் தெரிவிக்கப்படுவதில்லை. பல மனுக்களுடைய முடிவுகள் காலதாமதமாகின்றன என்பதையும், அதற்குரிய முறையில் நடவடிக்கை எடுப்பதற்கும், வட்ட அளவில்;— இதுபோன்ற நம்முடைய இதயதெய்வம் புரட்சித் தலைவி ஆட்சியிலே மாவட்ட அளவில் துணை கலெக்டர் ராங்கில் இருக்கிற அதிகாரிகளைப் போல, வட்ட அளவில் ஏதாவது இந்த மனுக்களைப் பரிசீலிக்க, உதவி செய்ய, அதிகாரிகளை நியமிக்கிற உத்தேசமும் இந்த குறை தீர்க்கும் நாளை கிராமங்களிலும் கொண்டு வருவ தற்கும் அரசு ஏதாவது செயற் குறிப்பு வைதிருக் கிறதா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-40

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்டத் தலைநகரில் இப்போது ஆர்.டி.ஓ. லெவலில் ஒருவரை மனுக்களை மட்டும் பெற போடப்பட்டிருக்கிறது என்பதை இங்கே தெரிவித்தேன். மாண்புமிகு உறுப்பினர் முருகானந்தம் அவர்கள் வட்டத்தினுடைய அளவிலே போட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறார்கள். வட்டத்தினுடைய அளவிலே வட்டாட்சியருக்குத் துணையாக ஒரு துணை வட்டாட்சியரை போடலாமா என்பது ஆய்வில் உள்ளது. நான் முதலில் சொன்னது மாவட்ட ஆட்சித் தலைவருக்குத் துணையாக ஒருவரை நியமிக்க உத்தரவு போட இருக்கிறோம். வட்டத்திலே இருக்கின்ற வட்டாட்சியருக்குத் துணையாக ஒரு துணை வட்டாட்சியரை போடலாம் என்பது ஆய்வில் இருக்கிறது. மனுக்களைப் பெற்ற பிறகு அந்த மனுக்களுக்கு எப்போது பதில் வரும் என்பது ஒரு வெள்ளை அட்டையில் இந்த நேரத்தில் உங்களுக்கு பதில்கள் வரும் என்று தேதி குறிப்பிட்டு அனுப்புகிறோம். அப்படி தேதிகளை குறிப்பிட்டு அனுப்புகிறபோது அந்த குறிப்பிட்ட தேதியில் பதில் வரவில்லை என்றுதான் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் முருகானந்தம் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அப்படி குறைகள் இல்லாமல் எங்கெங்கே அந்த மாதிரி மனுக்களைப் பெற்று அந்த மனுக்களுக்கு ஒரு வெள்ளை அட்டை கொடுக்கிறபோது, இந்த தேதியில் உங்களுக்கு பதில் வரும் என்று குறிப்பிடுகிறபோது, பதில் வராவிட்டால் தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. என். ஜி. வேணுகோபால்.

திரு. என். ஜி. வேணுகோபால் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் பதில் சொல்லுகிறபோது, மாவட்ட ஆட்சித் தலைவருக்குத் துணையாக ஆர்.டி.ஓ. லெவலிலே போட இருக்கிறோம். என்று தெரிவித்தார்கள். இருந்தாலும் ஐ. ஏ. எஸ். அதிகாரி ஒருவர் துணையாக இருந்தால்தான் வருகிற மனுக்களின் பேரில் பரிகாரம் காணுவதற்கு உடனடியாக அதன் மீது நடவடிக்கை எடுப்பதற்கு அவர்களுக்கு அதிகாரம் இருக்கிறது. எனவே, ஐ. ஏ. எஸ். அதிகாரிக்குத் துணையாக ஒரு ஐ. ஏ. எஸ். அதிகாரி இருந்தால் இந்த மனுக்கள் வரும்போது அதிகமாக பரிசீலனை செய்து உடனடியாக நடவடிக்கை எடுக்க வாய்ப்பு இருக்கும். எனவே இதை அமைச்சர் பரிசீலிப்பாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஐ.ஏ. எஸ். பட்டம்பெற்றவரா, ஐ.ஏ.எஸ். பட்டம் பெறாதவரா என்பது அங்கே

முக்கியம் இல்லை. போடப்படுகிற அதிகாரிக்கு கொடுக்கப் படுகிற அதிகாரத்தைப் பொறுத்து இருக்கிறது. ஆனால் ஐ.ஏ.எஸ். அதிகாரியைப் போட்டு அதிகாரம் இல்லாவிட்டால் ஒன்றும் செய்ய முடியாது. அதனால் ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் தான் திறமைசாலி என்றும் மற்றவர்கள் எல்லாம் திறமைசாலி இல்லை என்று தவறாகக் கருதிவிடக் கூடாது. ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் திறமைசாலிகள் தான். ஆனால் ஐ. ஏ.எஸ். அதிகாரிகள் அல்லாதவர்களிலும் திறமைசாலிகள் இருக்கிறார்கள். சில இடங்களில் அவர்களை விட ஐ.ஏ.எஸ். அதிகாரிகளாக அல்லாதவர்கள் திறமைசாலிகளாக இருக்கிறார்கள். திறமை என்பது பட்டப்படிப்பில் மட்டுமே வரவில்லை. பெறுகிற பட்டத்தைப் பொறுத்து மட்டுமே வரவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 592, திரு. தா. வேடியப்பன். மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

592—

திருவண்ணாமலை—சம்புவராயர் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திற்கு இடம் கையகப்படுத்தல்

*6801 திரு. தா. வேடியப்பன் : மாண்புமிகு வருவாய் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா :

(அ) திருவண்ணாமலை — சம்புவராயர் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திற்கு இடம் கையகப்படுத்தப் பட்டுள்ளதா?

(ஆ) மேற்படி அலுவலகத்திற்கு கட்டிடம் கட்ட அரசு முன்வருமா?

(இ) ஆம் எனில், எப்பொழுது பரிசீலிக்கப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

(அ), (ஆ) மற்றும் (இ) : திருவண்ணாமலை—சம்புவராயர் மாவட்டத்திற்கு மிக விரைவில் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகம் கட்டப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. தா. வேடியப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த தி.மு.க. அரசின்போது எங்களுடைய வட ஆற்காடு மாவட்டத்தை இரண்டாகப்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS